...ப்ஸ்கூல்வரை எல்லோருக்கும் இலவசகல்வி!

...IDUTHALAI REGD-No:M.4789

விடுதலை

நிறுவனம்: 1936

திராவிடர் தமிழ்த் தினசரி.

மலர் 25] சென்னை: சோபகிருது ௵ மாசி௴ 18உ ❋ 1—3—64) ஞாயிறு ❋ [இதழ் 668

வெளியூர் (2—3—64) திங்கள்; விலை 7 காசுகள்

ரூ. 20-க்கு குறையாத தாராள பென்சன் திட்டம்

வியாபாரிகள் கொள்ளை லாபமடிக்காமலிருக்க கண்காணிப்புக்குழு!

புதுவரி எதுவும் கிடையாது!

வரவு ரூ. 137·48 கோடி: செலவு ரூ. 140·82: துண்டுவிழும் தொகை ரூ. 3·34

தமிழக சட்டசபையில் வரவு-செலவுத் திட்டம் அறிவிப்பு

சென்னை, மார்ச், 1-

புதுவரி எதுவும் விதிக்கப்படாமலும், அதே சமயத்தில் எஸ். எஸ். எல். சி. வரை அனைவருக்கும் இலவசக் கல்வியளிக்கவும், அரசாங்க ஊழியர்களின் பென்ஷன் திட்டத்தை தாராளமாக்கி வழங்கவும் அரசு ஊழியருக்கு சமூக பாதுகாப்பு திட்ட அடிப்படையில் குடும்ப பென்ஷன் திட்டமும், ரூ: 5½ கோடி செலவில் புதிய வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளவும் 1964-65 ம் தமிழக வரவு - செலவுத் திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. பருத்திமீதும் பருத்தி நூலின் மீதுமுள்ள வரி விகிதத்தை ஒரு சத விகிதத்திலிருந்து 2 சத விகிதமாக உயர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

"குடும்பச் சூழ்நிலையின் காரணமாகவோ அல்லது வேறு பிற காரணங்களுக்காகவோ மேற்படிப்பு படிப்பதற்கான வாய்ப்புகள் எவருக்கும் மறுக்கப்படக் கூடாது என்பதுதான் அரசாங்கக் கொள்கை ஆகவே பெற்றோர்களின் மாத வருவாயைப் பொருட்படுத்தாமல் அனைவருக்கும் உயர்நிலைப்பள்ளி இறுதி வரை இலவசமாகவே கல்விவசதி அளிக்க இப்போது அரசாங்கம் முடிவு செய்துள்ளது, 1964-65 ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் உயர்நிலைப்படிப்புக்கான தலைப்பின் கீழ் இச்செலவுக்காக கூடுதலாக ரூ. 50 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது."

என்று தமிழ்நாட்டு முதலமைச்சரும், நிதியமைச்சருமான திரு. பக்தவத்சலம் நேற்று சட்டசபையில் 1964-65 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவு திட்டத்தை வெளியிட்டுப் பேசுவகயில் அறிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில் குறிப்பிட்டதுதாவது;-

இலவசக்கல்விக்கான வசதி

"இந்த இலவசக்கல்வித்திட்டத்தினால் உள்ள நன்மைகளை எல்லா மக்களும் அடைய வேண்டுமென்பதற்காக புதிய உயர்நிலைப் பள்ளிகள் கட்டவும் அதன் பிறகு படிப்பு வசதிகளைப் பெறுவதற்கும் கல்லூரி வசதிகளை அதிகரிப்பதற்கும் திட்டமிடப்பட்டிருக்கிறது.

கிராமங்களுக்குக் கல்வி

கடந்த மூன்றாண்டுகளில் மட்டும் அறுநூறு உயர் நிலைப்பள்ளிகளைத் துவக்கியுள்ளோம். அவற்றுள் பெரும்பாலானவை கிராமப் புறங்களிலேயே ஆரம்பிக்கப்பட்டன இது வரை உயர் நிலைப் படிப்பின் வளையத்துக்கு வெளியே வசதிக் குறைவால் நின்ற நாட்டுப்புற ஏழை மக்களும் இனிமேல் தங்கள் குழந்தைகளை சம்பளச் சலுகையின் துணை கொண்டு உயர்நிலை பள்ளிகளுக்கு அனுப்பி வைக்ககூடிய நிலையை உருவாக்கியுள்ளோம்.

புதிதாக 5 கல்லூரிகள்

கல்லூரி படிப்பிற்கான வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்கவேண்டிய அவசியத்தையும் அரசாங்கம் உணர்ந்துள்ளது இவ்வாண்டு வரவு செலவுத் திட்டத்தில் மேலும் 5 கல்லூரிகள் வட சென்னையிலும். செங்கற்பட்டு. தென்னார்க்காடு, வடஆர்க்காடு, சேலம் ஆகிய மாவட்டங்களில் ஒவ்வொன்றாகவும் அமையும்.

சோஷ்லிய சமுதாயம்

ஜனநாயகக்கட்டுக்கோப்பிற்குள் ஒரு சோஷலிச சமுதாய தை அமைக்க நாம் உறுதி கொண்டுள்ளோம் அனைவருக்கும் சமவாய்ப்பு கொடுப்பதுதான் ஒரு சோஷ்யலிச சமுதாயத்தின் முக்கியமான இலட்சியம்,

தாழ்த்தப்பட்டோர் பிற்படுத்தப்பட்டோருக்கு வசதி

தாழ்த்தப்பட்டவர்களும், பிற்படுத்தப்பட்டவரும் கல்வியால் உயரவேண்டுமென்று எண்ணி அவர்களுக்கு வாய்ப்பளிக்க உபகாரத்தொகை வழங்குதல், சம்பளச் சலுகைகள் போன்ற விசேஷ திட்டங்கள் மூலம் முயன்று வந்துள்ளோம். தாழ்த்தப்பட்டவர்களுக்கும், பின்தங்கிய வகுப்பினருக்கும் உள்ள தனிச்சலுகைகளை மேலும் நீடிப்பதோடு சமூகத்தின் மற்றவருப்பிலுள்ள ஏழைகளுக்கும் சலுகைகள் தேவையாயிருக்கின்றன என்பதையும் அரசாங்கம் விரைவிலேயே உணர்ந்தது.

மதிய உணவுத்திட்டம் அபிவிருத்தி

ஏழைகள் தங்களுடைய குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்புவதிலுள்ள சிரமங்களை நீக்குவதற்கான திட்டத்தின் ஓர் அம்சமாகத்தான் மதிய உணவுத்திட்டம் தொடங்கப்பட்டது' சிறிய அளவில் தொடங்கிய இத்திட்டம் படிப்படியாக 1964-65 ஆம் ஆண்டில் ரூ. 16800000 செலவில் பதினான்கு லட்சம் குழந்தைகள் பயன்துய்க்கும் வண்ணம் பெரிய திட்டமாக வளர்ந்துள்ளது.

அரிசி விலை கட்டுப்படுத்த நடவடிக்கை

கடந்த சில வாரங்களில் சென்னை நகரில் அரிசி விலை ஏறியதற்குக் காரணம் நடுத்தர வகுப்பினர் விசேஷமாகவிரும்பும் நெல்லூர் அரிசி வழக்கமாக வருவது தடைப்பட்டதே என்று நம்ப இடமிருக்கிறது. இதற்கான காரணங்கள் தற்காலிகமானவையே தற்காலித் தடை நீங்கி வழக்கமாக வரும் அரிசி இங்கே வரும் போது அரிசி விலையிலும் சாதகமான ஒரு மாற்றம் ஏற்படும் ஆனாலும் இன்னல்களைக் குறைக்க அவ்வப்பொழுது நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியிருக்கு மென்பதையும் நாம் உணர்ந்துள்ளோம் பயன்படுத்துவோர் கூட்டுறவுச் சங்கங்களை பெரிய அளவில் அமைக்கும் திட்டம் கடந்த ஆண்டில் தொடங்கப்பட்டது இக்கூட்டுறவுச் சங்கங்களின் வளர்ச்சிக்காக ரூ 81 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது நகர வாசிகளின் இன்னல்களை உடனடியாகத் துணிப்பதற்காக 300 நியாய விலைக்கடைகளை தொடங்கப்பட்டுள்ளன.

கண்காணிப்புக்குழு

நமது ரெவின்யூபோர்டில் ஒரு "விலை கண்காணிப்பு ஸ்தாபனத்தை" நிறுவியுள்ளோம் இந்த ஸ்தாபனத்தினர் சேகரிக்கும் புள்ளி விவரங்கள் மொத்த — சில்லறை வியாபாரிகளுடைய அதாய வரம்புகளை நிர்ணயிக்க உதவும். கூட்டுறவுத் துறையில் மேலும் அரிசி மில்களை நிறுவுவதன் மூலமும் இதுபற்றிய விவரங்கள் நமக்கு கூடுதலாகக்கிட்டும் தவிர அவற்றின்மூலம் விலைவாசிகளையும் கட்டுப்படுத்த முடியும் இங்கனம் உணவுப் பொருள்களின் வியாபாரத்தைக் கட்டுப்படுத்தும்போது உற்பத்தியைப் பெருக்குவதில் விவசாயிகளுக்கு உள்ள ஊக்கம்குன்றாமல் பார்த்துக் கொள்ளவேண்டும்.

தனியார் துறைக்கும் இடம்

சோஷ்யலிச பொருளாதார அமைப்பில் தனியார் துறைக்கும் இடமிருக்கும் ஆனால் சமுதாயத்தால் ஒப்புக்கொள்ளப்பட்ட திட்டக்கட்டுக்கோப்பிற்குள், சமுதாய நலன்களை வளர்க்கும் வகையில் இயங்க வேண்டியிருக்கும்.

பென்சன் திட்டம்

அரசாங்க ஊழியர்களின் நலனில் அரசாங்கத்துக்கு எப்பொழுதுமே அக்கறை உண்டு. விலைவாசிகளின் உயர்வை யொட்டி தற்காலிகமாக உயர்த்தப்பட்ட மாதம் 20 ரூபாய்க்குக் குறைவாக வாங்கும் ஊழியர்களுக்கும் ரூ. 20 பென்ஷன் கிட்டும்படி செய்ய அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

முதியோர் பென்சன் திட்டத்தின் கீழ் 62000 பேர்களுக்கு மேல் நன்மையடைந்துள்ளார்கள். அடுத்த ஆண்டில் இப்

3-ம் பக்கம் பார்க்க

தமிழகத்தின் பட்ஜெட் கண்ணோட்டம்

ரூபாய் கோடிக்கணக்கில்

	1963-64 பட்ஜெட்.	1963-64 திருத்தப்பட்டது	1964-65 பட்ஜெட்
வருமானம்	124·45	130·98	137·48
செலவினங்கள்	127·19	134·00	140·82
அதிகச் செலவு (துண்டுவிழும் தொகை.)	2·74	3·02	- 3·34

தமிழகத்தில் பெண்கல்வி வேகமாக முன்னேறுகிறது!

மைசூர், அசாம் கல்வித்துறை அமைச்சர்கள் பாராட்டு!

இராமேஸ்வரம், மார்ச். 1— தமிழ்நாட்டில் பெண்கல்வி மிகவும் முன்னேறி வருகிறதென்று மைசூர் மாநில கல்வி அமைச்சரும், துணை அமைச்சரும் வெகுவாகப் பாராட்டியுள்ளனர்.

வெள்ளியன்று மைசூர் கல்வியமைச்சர் திருமதி கிராபேடக்கர், அசாம் மாநில கல்வித்துறை துணையமைச்சர் திருமதி கே. கே. பரூவா ஆகியோர் இங்கு வந்தனர்.

இவர்கள் பத்திரிகையாளரிடம் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

"தமிழ்நாடு கல்வித்துறையில் மிகவும் முன்னேறியுள்ளது. முக்கியமாக பெண் கல்வியில் வேகமாக முன்னேறிவருகிறது. இது தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில் நல்ல அம்சமாகும்."

இவ்வாறு இரு அமைச்சர்களும் கூறி பாராட்டியுள்ளனர்.

திரு. காமராசர் மார்ச் 6ல் சென்னை வருகிறார்

சென்னை. மார்ச், 1...

அகில இந்திய காங்கிரசுத் தலைவர் திரு. காமராசர் மார்ச் மாதம் 6-ம் தேதி விமானம் மூலம் டில்லியிலிருந்து வருவார், சென்னைக்கு காலை 11-35க்கு வந்து சேருவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

அரசுத்துறையில் டிராக்டர் உற்பத்தி

துரிதப்படுத்த யோசனை

புதுடில்லி. மார்ச் 1— நாட்டில்டிராக்டர்கள் உற்பத்தி மந்தமாகவேஇருக்கிறது. எனவே டிராக்டர்கள் உற்பத்தி இலக்கை அடைய வேறு துரிதமுறைகளை வகுக்கவேண்டியுள்ளது என்று உருக்கு சுரங்க,கனரகத் தொழில் துறை அமைச்சர் திரு, சி, சுப்ரமணியம் மக்கள்சபையில் கூறினார்.

திரு. ஏ. பி. ஜெயின் கேள்விக்கு பதிலளிக்கையில் பல டிராக்டர் உற்பத்தி சாலைகளுக்குப் பதிலாக விலைகளைக் குறைக்க வசதியாக இருக்கும் பொருட்டு அதிகஉற்பத்தி சக்தியுள்ள பெரியதாக ஒரே தொழிற்சாலை வைக்கலாம் என்ற யோசனையும் கவனிக்கப்படும் என்றார்.

1964-65 பட்ஜெட்: வரி ஏய்ப்பைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள்

1. வரிகளைச் செலுத்தும் போது அனுப்பப்படுகிற விவர அறிக்கை ஒவ்வொன்றிலும் அதில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் சரியானவைதான் என்பதுபற்றியஉறுதி மொழியொன்றும் அடங்கி இருக்கவேண்டும்.

2. அந்த அறிக்கையில் கணக்குப்படியான வரிபாக்கி அறிக்கை சமர்ப்பிக்கப்படும் தேதியிலிருந்து ஒருமாத காலத்துக்குள்ளாக செலுத்தப்படவேண்டும். அவ்வாறு செலுத்தத் தவறும் சந்தர்ப்பங்களில் சம்பந்தப்பட்ட நபர் கணிசமான அபராதம் செலுத்த வேண்டியிருக்கும்.

3. வருமான இனங்களைக் கணக்கிடாமல் ஒளிப்பதற்கு அபராதம் விதிப்பது சம்பந்தமாக சட்டத்தில் தற்போது இருந்து வருகிற ஷரத்து திருத்தப்படும், புதிய ஷரத்தின்படி சம்பந்தப்பட்ட நபர் அறிவிக்கும் வருமான விவரம் கணக்கிடப்படும் வருமானத்தைக் காட்டிலும் 90 சதவிகிதத்திற்கு குறைவாக இருக்கும் சந்தர்ப்பங்களில் வருமான விவரங்களை ஒளித்ததாகக் கருதப்படும். அவ்வாறு ஒளிக்கப்படவில்லையென்று ருசுப்படுத்த வேண்டியது சம்பந்தப்பட்ட நபரின் பொறுப்பாகும்.

4. கணக்குக்காட்டாமல் ஒளிக்கப்பட்ட செல்வ இனங்களைக் கண்டுபிடிப்பதற்கு விரிவான அதிகாரங்களை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த அதிகாரங்கள் பயன்தரும்வகையில் உயோகப்படுத்தப்படும் பெருந்தொகைகள் ரொக்கமாகக் கைமாறும் பேரங்களில் படுபடுகிற நபர்களுக்கு இது எச்சரிக்கையாக அமையும்.

5. வருமான வரிவிதிப்புச்சட்டத்திலும், அதுபோன்ற இதர சட்டங்களிலும் அடங்கியுள்ள ரகசியங்களைப் பாதுகாப்பது சம்பந்தமான ஷரத்தை ரத்து செய்ய உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. இவ்வெல்லா நடவடிக்கைகளின் கூட்டுவிளைவாக வரி வசூலுக்கு மட்டிலுமின்றி ஒளிவு மறைவின்றி வரிசெலுத்துவோர் நியாயமாக நடத்தப்படுவதற்கும், பெரிதும் வழி பிறக்கும் என்று நம்பப்படுகிறது.